# அகத்தில் தலைவியின் சொல்வன்மை

**பொ. அபிராமி**
பகுதி முனைவர் பட்ட ஆய்வாளர்
தமிழாய்வுத்துறை, காவேரி மகளிர் கல்லூரி (தன்னாட்சி)
(பாரதிதாசன் பல்கலைக்கழகத்துடன் இணைவு பெற்றது), திருச்சிராப்பள்ளி – 620 018

**முனைவர் ச. இராமலட்சுமி**
துணை முதல்வர் மற்றும் துறைத்தலைவர்
தமிழாய்வுத்துறை, காவேரி மகளிர் கல்லூரி (தன்னாட்சி)
(பாரதிதாசன் பல்கலைக்கழகத்துடன் இணைவு பெற்றது), திருச்சிராப்பள்ளி – 620 018

**ஆய்வுச் சுருக்கம்**
சங்க காலம் பரந்துபட்ட நிலப்பரப்பினையும், மக்களின் வாழ்க்கை முறையினையும் கொண்டுள்ளது. சங்க இலக்கியங்கள் என்பது எட்டுத்தொகையும், பத்துப்பாட்டும் இணைந்த பதினெண் மேற்கணக்கு நூல்களின்தொகுதியாகும். அவை அகத்திணையும், புறத்திணையும் கொண்டு மக்களை நல்வழிப்படுத்தியுள்ளன. அவற்றுள் அக இலக்கியங்களாகத் திகழும் நூல்களில் கூறப்பட்ட தலைமைமாந்தர்களில் முக்கியமாகக் கருதப்படுபவள் தலைவி ஆவாள். தோழியின் செயல்கள் ஒவ்வொன்றிலும் தலைவியின் சொல்வன்மையானது பிரதிபலிக்கின்றது. தலைவி தன்னுடைய சூழலைச் சொற்களால் திறம்பட எடுத்துரைத்து கையாண்ட பாங்கினை ஆராய்வதே இவ்ஆய்வுக்கட்டுரையாகும்..

**முன்னுரை**

சங்க இலக்கியத்தில் முக்கியமாகத் தலைவி கருதப்படுவதற்குக் காரணம் சொற்களைச் சரியான இடத்தில் சரியான முறையில் பயன்படுத்தும் தன்மையாகும். அனைத்து இடங்களிலும் பேசாமல் பேச வேண்டிய தருணத்தில் தன்னுடைய கருத்தினைக் கூறியுள்ளாள். மேலும், சங்க இலக்கியத் தலைவி தன்னுடைய கருத்தைத் தெரிவிப்பதிலும், பிறருடைய கருத்திற்குச் செவி சாய்த்து அதனைப் பற்றி ஆராய்வதிலும் சிறப்பானவளாகத் திகழ்கின்றாள். தலைவன் மற்றும் தோழியைச் சிறப்பாகச் செயல்படுத்தும் கதாபாத்திரமாகத் தலைவி திகழ்ந்த தன்மையினை இலக்கியங்கள் வழி அறிய முடிகின்றது. ஒருவரையொருவர் ஆளுகின்ற தன்மைக்குச் சொல்லே முதன்மையானதாகக் கருதப்படுகின்றது. தலைவியானவள் மென்மைத் தன்மைக்கு நிகராக திண்ணிய சொல்வன்மை உடையவளாகவும் திகழ்கின்றாள். சங்க இலக்கியங்களில் வாயில் மறுத்தல், இயற்படமொழிதல், சிறைப்புறக் கூற்று போன்ற கூற்றுகள் அனைத்தும் தலைவியின் சொல்லாற்றாலுக்குச் சிறந்த சான்றுகளாக விளங்குகின்றன.

**பெண்களின் மாண்புகள்**

தலைவியின் சொற்கள் தலைவனின் உள்ளத்தை உருக்கும் தன்மை உடையதாக இருக்கின்றது. கற்பு, நல்லொழுக்கம், பொறுமை, விருந்தினர்களையும், சுற்றத்தினரையும் போற்றும் பண்பு போன்றவைபெண்மைக்கு அணி சேர்க்கும்.இப்பண்புகள் தலைவிக்கு அமைந்திருத்தலைப் பற்றி,

“ கற்பும் காமமும் நற்பால் ஒழுக்கமும்
மெல்லியற் பொறையும் நிறையும் வல்லிதின்
விருந்து புறந்தருதலும் சுற்றம் ஓம்பலும்
பிறவும் அன்ன கிழவோள் மாண்புகள்.”

(தொல், கற்பியல் – 1)

என்ற நூற்பாவில் எடுத்துரைக்கப் பட்டுள்ளது. பெண்ணாகப் பிறந்த பயனை அவள் தன்னுடைய நற்செயல்களின் மூலம் வெளிப்படுத்துவதோடு இல்லப் பெருமையினைக் காப்பதற்கும் சிறந்த முறையில் செயல்படுகின்றாள்.

**சொல்லும் செய்தி பரிமாற்றமும்**

நாகரீகத்தின் வித்தாகவும் எண்ணத்தின் உருவாகவும் நின்று மனிதர்களை ஒன்றுபட வைப்பது சொற்களாகும். சொற்களின் வழியாக மொழியானது வளர்ச்சியடைந்து இலக்கியமாகத் திகழ்கிறது. மாந்தர்களின் மனதில் துன்பத்தைப் போக்கி இன்பத்தை ஏற்படுத்தக் கூடியது சொற்களாகும். ஒரு மனிதருடன் அல்லது பல மனிதர்களுடன் இணைந்து செய்தி பரிமாற்றமானது நடைபெறும். அது மட்டுமல்லாமல் தன் மனதிற்குள் மட்டும் பேசிக் கொள்வதனை “நெஞ்சோடு கிளத்தல்” என்று உரைக்கின்றார்கள். இந்நிகழ்வானது தலைவனது பிரிவின் காரணமாகத் தன்னுடைய துக்கத்தினைப் பிறர் அறியா வண்ணம் தனக்குத் தானே பேசிக் கொள்ளும் விதம் பற்றி,

“ காணாமை இருள் பரப்பி, கையற்ற கங்குலான்,
மாணா நோய் செய்தான்கண் செய்தான்கண் சென்றாய்; மற்று அவனை நீ
காணவும் பெற்றாயோ? காணாயோ? மட நெஞ்சே!” ( கலித்தொகை -123)

என்ற கலித்தொகைப் பாடல் மூலம் அறிய முடிகின்றது. தலைவன் தலைவியைப் பிரிந்து சென்ற பொழுது தலைவியின் மனமானது அவனைக் காணாததால் துன்பம் அடைகின்றது. தன் மனமாது தன்னைக் கேளாமல் தலைவனை நாடிச் சென்றதை எண்ணி சொற்களின் துணையோடு வருந்தியதை அறிய முடிகின்றது.

**தலைவியின் சொல்லாற்றலின் தன்மை**

தலைவன் தலைவியின் சந்திப்பானது ஊழ்வினையின் காரணமாக நிகழ்வதாக நம்பப்படுகின்றது. திருமணத்திற்கு முன்பான இந்நிலையினைக் களவு என்றழைப்பார்கள். களவு வாழ்வில் தலைவன் வரைவினை நடத்தாமல் நீட்டிக் கொண்டிருக்கின்றான். அந்தச் சூழ்நிலையில் பொருள் தேடுவதற்காகப் பிரிந்து செல்ல எண்ணுகின்றான். இச்செய்தியானது தலைவிக்குத் தோழியின் வாயிலாக தெரிகின்றது. அப்பொழுது தலைவி, தலைவன் சிறைப்புறமாக உள்ளான் என்பதனை அறிந்து கொண்டு அவன் செல்வதை நேரடியாகச் செல்ல வேண்டாம் என்று உரைக்காமல், தன்னுடைய மனதில் உள்ள தலைவனின் உயர்ந்த செயல்களைச் சான்றாகக் காட்டுகின்றாள். இதன் மூலம் தலைவன் தன்னுடைய மனதில் தலைவியை விட்டு நீங்கும் எண்ணத்தினை கைவிடும் நிலையானது உருவாகின்ற தன்மையினைப் பற்றி,

“நிலத்தினும் பெரிதே வானினும் உயர்ந்தன்று
நீரினு மாரளவின்றே சாரற்
கருங்கோல் குறிஞ்சிப்பூக் கொண்டு
பெருந்தேன் இழைக்கும் நாடனொடு நட்பே.”

( குறுந் – பா. எண்:3)

என்ற குறுந்தொகை பாடல் மூலம் அறிய முடிகின்றது. தலைவன் பிரிந்து செல்ல எண்ணுகின்ற பொழுது அவனுடைய பிரிவினை ஏற்கும் நிலையில் தான் இல்லையென்பதை தன்னுடைய சொல் திறத்தின் மூலம் எடுத்துரைக்கின்றாள்.

**இற்செறிப்பில் தலைவியின் சொல்திறம்**

தலைவனுக்கும் தலைவிக்கும் ஏற்பட்ட களவு வாழ்வினைப் பற்றி செவிலித்தாய்க்குத் தெரிய வருகின்றது. தலைவியைப் புறத்தே செல்ல விடாமல் தாய் முதலியவர்கள் பாதுகாக்கின்றனர். இத்தகைய சூழலில் தலைவியின் உடலில் மாறுபாடு காணப்படுகின்றது. கட்டு விச்சியை அழைத்து குறி கேட்கின்றனர். பகலில் தலைவனும் தலைவியும் சந்திக்க முடியாத பொழுது இரவுப் பொழுதில் சந்திக்கின்றனர். தோழியின் மூலம் இரவு சந்திப்பு நிகழ்கின்றது. நீண்ட நாட்கள் இத்தகைய சந்திப்பு நிகழும் போது வரைவு நடைபெறாமல் சந்திப்பு நிகழ்வதனை எண்ணித் தலைவி தோழியிடம் வருந்துகின்றாள். உடனே தோழி தலைவனிடம் இரவுக்குறியை மறுக்கின்றாள். விரைவாக வந்து திருமணம் செய்து கொண்டால் பகலிலும் தலைவியைச் சந்திக்கலாம் என்பதனை,

“ பகல்நீ வரினும் புணர்குவை” ( அகநானூறு – 18)

என்ற அகநானூற்றுப் பாடல் மூலம் அறிய முடிகின்றது. களவில் வரஇயலாது. ஆனால் கற்பு வாழ்வில் பகல், இரவு இரண்டு பொழுதுகளிலும் சந்திக்கலாம் என்பதனை தலைவனுக்கு மறைமுகமாக விளக்குகின்றாள். இற்செறிப்பு தொடர்கின்ற பொழுது அதனைத் தாங்க முடியாத தலைவியானவள் தலைவனுக்கும் தனக்கும் உள்ள உறவினைத் தாயிடம் சென்று முறையிடுதல் பற்றி கூறுகின்றாள். இதனை,

" நெடுந்தேர் எந்தை அருங்கடி
இருவேம் ஆய்ந்த மன்றல் இதுஎன்
நாம்அறி வுறாலின் பழியும் உண்டோ?" ( குறிஞ்சிப்பாட்டு – 20-22)

என்ற குறிஞ்சிப்பாடலின் மூலம் அறியலாம். தலைவியின் சொல்லினைக் கேட்டத் தோழியானவள் தானே சென்று தாயிடம் காட்டில் நடந்தவற்றை எடுத்துரைக்கின்றாள். இல்லத்திற்குள் இருப்பதால் தலைவனைக் காண முடியாத நிலையில் தலைவி தன்னுடைய சொற்களின் மூலம் சினத்தைக் காட்டுகின்றாள். தானாகக் கூறினால் பழியாகி விடும். ஆகவே, என்னுடைய உள்ளக்கருத்தினைத் தாய்க்குச் சென்று நீ உரைத்து வருவாயாக என்பதனைக் கூறாமல் கூறியுள்ளாள்.

**தலைவியின் சொல்வன்மையால் தோழி அறத்தோடு நிற்றல்**

தலைவி தன்னால் தலைவனைச் சந்திக்க இயலாத பொழுது முடியவில்லை என்பதனைத் தோழிக்குப் புரிய வைக்க முயல்கின்றாள். அதற்காகத் தன்னுடைய நெஞ்சினைத் தூது விடுவதாக உரைக்கின்றாள். தன்னுடைய உள்ளத்தின் வலியினைத் தோழி புரிந்து கொண்டு செயல்படும் விதமாக,

"கோடீர் இலங்குவளை நெகிழ நாடெறும்
பாடில கலிழும் கண்ணொடு புலம்பி
ஈங்கிவன் உறைதலும் உய்குவம் ஆங்கே
……..
எழுவினி வாழியென் னெஞ்சே"(குறுந்தொகை – 11)

என்ற குறுந்தொகை பாடலின் மூலம் அறிய முடிகின்றது. தன் நெஞ்சினை வாழ்த்தி நீ தலைவனின் நாட்டிற்குச் செல்வாய். ஏனெனில் என்னால் தலைவனைச் சந்திக்க இயலவில்லை நீயாவது சென்று விட்டு வந்து தலைவன் இருக்கின்ற நிலையினை என்னிடம் கூறவேண்டும் என்று கூறுகின்றாள். இவ்வாறாகத் தலைவி தன்னுடைய துயரம் முழுவதும் தோழி அறிந்து, அறத்தோடு நிற்பதாக எடுத்துரைக்கப்படுகிறது. இதனை,

" அகவன் மகளே அகவன் மகளே
மனவுக் கோப்பன்ன நன்னெடுங் கூந்தல்

அகவன் மகளே பாடுக பாட்டே
இன்னும் பாடுக பாட்டே அவர்
நன்னெடுங் குன்றம் பாடிய பாட்டே." (குறுந்தொகை – 23)

என்ற குறுந்தொகை பாடல் மூலம் அறிந்து கொள்ள முடிகின்றது. தலைவியின் மனவருத்தம் அறிந்த தோழி குறி சொல்லும் பெண்ணை அழைத்து தலைவனின் மலைநாட்டினைப் பற்றி உரைக்கும் படி கூறுகின்றாள். இதன் மூலம் செவிலித்தாய்க்குச் சூழல் விளங்குகின்றது. தோழியை அழைத்து வினவுகின்றாள். இவ்வாறாகத் தோழியின் மூலமாக தலைவியின் மனதினை அறிந்துக் கொள்கின்றாள். தலைவியின் வருத்தம் நிறைந்த சொல்வன்மையின் மூலம் தன் இல்லத்தில் களவு வாழ்விற்கு முடிவினைக் கொண்டு வருகின்றாள்.

அதன் பின்னர் களவு வாழ்வினைக் கற்பு வாழ்வாக மாற்றுவதற்குத் தலைவி, தலைவனின் மீது ஆதிக்கம் செலுத்துகின்றாள். தலைவன் சிறைப்புறத்தானாக நிற்பதனை அறிந்து,

" நின்ற சொல்லர் நீடுதோன் றினியர்
என்றும் என்தோள் பிரிபுஅறியலர்
…
நறுநுதல் பசத்தல் அஞ்சி
சிறுமை உருபவோ? செப்பு அறியலரே" (நற்றிணை – 1)

என்ற நற்றிணைப் பாடலின் மூலம் தலைவன் தன் மேல் வைத்துள்ள அன்பின் தன்மையினைத் தலைவி உரைப்பதன் வாயிலாகத் தலைவன் புரிந்து கொண்டு விரைவில் வரைவு செய்தல் வேண்டும் என்பதனைத் தெளிவாக எடுத்துரைக்கின்றாள். மேலும், தலைவனின் பிரிவில் வாழ்கின்ற பொழுது ஊராரின் வார்த்தைகளின் அம்புகளால் காயப்பட்டு வாடிய தலைவி இனி இல்லறத்தில் இணைந்து வாழ்வேன் என்று சூளுரைக்கின்றாள். களவு வாழ்வானது கற்பு வாழ்வாக மாறுவதற்குத் தோழியே முழுமுதற் காரணமாக இருந்து உதவிய காரணத்தினால் தோழியை வாழ்த்தியும், பாராட்டியும் தன் மகிழ்வினை வெளிப்படுத்துகின்றாள்.

**இல்லறத்தில் தலைவி**

தலைவனும் தலைவியும் இணைந்து இல்லற வாழ்வினை மேற்கொள்கின்றனர். " கற்பெனப் படுவது கரணமொடு புணர" என்ற தொல்காப்பியம் நூற்பா திருமணம் என்னும் நிலை இருந்த தன்மையினைப் பறைசாற்றுகின்றது. இல்லற வாழ்வு அறத்தோடு நிற்றல் என்பது ஏழு நிலைகளில் நடைபெறும் என்பதனைத் தொல்காப்பியம் விளக்கியுள்ளது. தலைவனை எண்ணி இருக்கும் தலைவிக்கு அவனுடைய வருகை ஏற்படுத்தும் தாக்கத்தினை,

" அரும்பெறற் காதலர்" என்று குறுந்தொகையில் உரைக்கின்றாள். தலைவனின் அன்பை மட்டும் எண்ணி வாழ்கின்ற தலைவியானவள், தன்னிடம் கொண்டுள்ள அன்பிற்கு மாறுதலான செயல்களைத் தலைவன் செய்வதனைக் கண்டிக்கும் வகையில் தன்னுடைய உணர்ச்சிகளைக் கோபத்துடன் வெளிப்படுத்துகின்றாள். அக்கோபமானது ஊடல் என்னும் வகையில் அடங்குகின்றது. வாயில் மறுத்தலின் மூலமாக வெளிப்படுகின்றது. நெய்தல் திணைக்குரிய இரங்கல் தன்மையில் வெளிப்படுகின்றது. என்பதனை,

"நுந்தை வியன் மார்பில்
தாதுதேர் வண்டின் கிளைபாட, தைஇய
கோதை பரிபுஆட காண்குவம்" ( கலித்தொகை -80)

என்ற பாடலில் தன்னுடைய தலைவனின் மீது கோபம் இருந்தாலும் வெளியில் இல்லாதது போல் காட்டிக் கொள்கின்றாள். ஆனாலும் தன்னுடைய சொற்களின் மூலம் குழந்தைக்கு விளையாட்டுக் காட்டும் போக்கில் தலைவனின் மீதுள்ள கோபத்தினை மறைமுகமாக வெளிப்படுத்துகின்றாள். இது மட்டுமல்லாமல்,

" எமக்கே வருகதில் விருந்தே! சிவப்பாள் அன்று
சிறு முள் எயிறு தோன்ற
முறுவல் கொண்ட முகம் காண்கம்மே." ( நற்றிணை – 120)

என்ற நற்றிணைப் பாடல் வழியாக இதனை அறிய முடிகின்றது. தலைவன் பரத்தையை நாடிச் சென்ற பின்பு இல்லத்திற்கு வருகின்றான். அவனுக்குத் தலைவி வாயில் மறுக்கின்றாள். அந்நேரத்தில் தலைவன் விருந்தினர் வந்தால் தலைவியின் முகத்தில் சிறுபுன்னகையைப் பார்க்கலாம் என்றெண்ணி இருக்கின்றான். தலைவனின் மேல் ஊடல் இருந்த பொழுதும் விருந்தினர்களின் முன்பாக அதனைக் காட்டாமல் மறைத்து இன்முறுவலுடன் வரவேற்கும் பண்பு தலைவியின் சிறந்த பண்பாகும். இது தமிழர்களுக்குரிய விருந்தோம்பல் என்னும் பண்பில் அமையக் கூடியதாகும். இவ்வாறாக தன்னுடைய செயல்களின் மூலம் பிறருடைய நடத்தைகளை மாற்றுகின்ற வல்லமை உடையவளாகத் தலைவி திகழ்கின்றாள்.

**முடிவுரை**

தலைவியின் எண்ணங்களைத் தன் சொற்களின் மூலம் எடுத்துரைக்கும் ஆற்றல் பெற்றவளாகத் திகழ்கின்றாள். தன் மேல் பழி வந்து விடாமல் தன்னுடைய நல்நடத்தையினை அனைவருக்கும் விளக்கும் விதமாகக் கூறுகின்றாள். தலைவனின் இல்லறப் போக்கினை உணர்த்தி செயல்பட வைக்கின்றாள். தன் பெண்மையின் இயல்பினை முழுமையாகவும் வெளிப்படுத்துகின்றாள். அக இலக்கியங்கள் உரைக்கும்

களவு, கற்பு வாழ்வில் தன்னுடைய சொல்வன்மையின் காரணமாக அனைவரையும் ஒன்றிணைத்தும், தன்னுடைய கருத்தைப் பிறருக்குப் புரியும் வண்ணம் எடுத்துரைத்து செயலாற்றியதையும் அறிய முடிகின்றது.

**துணை நின்ற சான்றாதாரங்கள்**

1. கலித்தொகை, புலியூர் கேசிகன், வர்த்தமானன் பதிப்பகம், சென்னை.
2. நற்றிணை , இராமையா பிள்ளை (1999) , வர்த்தமானன் பதிப்பகம், சென்னை.
3. குறுந்தொகை, அரவிந்தன் ( 1968), மணிவாசகர் பதிப்பகம், சென்னை.
4. தொல்காப்பியம், பொருளதிகாரம்(2014), மின்னூலகம், மாணவர் பதிப்பகம், சென்னை.
5. குறிஞ்சிப்பாட்டு, பொ.வே.சோமசுந்தனார்(1956), திருநெல்வேலி சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை.
6. அகநானூறு மூலமும் உரையும், ந.மு. வேங்கடசாமி நாட்டார்(2019), கௌரா பதிப்பகம், சென்னை.